GOVERNMENT OF MADRAS

BUDGET FOR THE YEAR

1956

(*b*) Amendments to Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).

(2) Discussion on the report of the Committee of Privileges on the definition of the term "Precincts of the House".

Order of Government Bills.

20th December 1956, 24th December 1956 and 26th December 1956. (After transacting finance business fixed for the day.)	1. The Madras-Co-operative Societies (Amendment(Bill, 1956. 2. The Madras Inams (Assessment) Bill, 1956. 3. The Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956. 4. The Madras Requisitioning and Acquisition o Immovable Property Bill, 1956. 5. The Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill, 1956. 6. A Bill to amend the Madras General Sales Tax Act, 1939, to increase the rate of tax on bullion.

SRI M. KALYANASUNDARAM : On a point of Order, Sir, கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கும், எஸ்டிமேட் கமிட்டிக்கும் ஏற்பட்டிருக்கும் காலி ஸ்தாபனங்களைப் பூர்த்தி செய்வதற்காக தேர்தல் நடத்தப்போவதாக சர்க்கார் கட்சித் தலைவர் சொன்னார்கள். அதேமாதிரியாக காலியாக இருக்கும் சட்டசபைத் தலைவர் (Speaker) ஸ்தானத்திற்கும் தேர்தல் நடத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஆலோசனை செய்ய வேண்டிய விஷயம்.

SRI S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தாங்கள் இப்போது சொன்ன விஷயங்களை தமிழிலே சொன்னால், தமிழ் அங்கத்தினர்கள் புரிந்துகொள்ள முடியும். இப்பொழுது அங்கத்தினர்கள் எல்லோரும் தமிழர்களாகவே இருப்பதனால் கனம் உதவி சபாநாயகர் அதைத் தமிழில் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த விஷயங்களை தமிழில் "சைக்லோஸ்டைல்" பண்ணி அங்கத்தினர்களுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

VI.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1957–58.

DEPUTY SPEAKER : The Hon. the Finance Minister will now present the Budget for the year 1957–58.

17th December 1956]

The Hon. Sri C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, 1957-58-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை இச்சபைமுன் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன். இது ஒரு இடைக்கால உத்தேச வரவு செலவுத் திட்டம். இருந்தபோதிலும், நடப்பு ஆண்டில் ராஜ்யத்தின் பொருளாதார நிலையும், இப்போதுள்ள வருமான செலவு விகித அடிப்படையில், வரும் ஆண்டில் இருக்கக்கூடிய நிலையும், இத்திட்டத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில், இச்சமயத்தில், வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கக் காரணமாய் இருக்கும் விசேஷ சந்தர்ப்பங்களைக் கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். அறிமுகம்.

மக்கள் இச்சபைக்குக் கொடுத்திருந்த அதிகார காலம் அனேகமாய் முடிவடைந்துவிட்டது. அடுத்த நிதி ஆண்டு தொடங்கும்போது, பொதுத் தேர்தல்கள் முடிந்து, புது அரசாங்கம் பொறுப் பேற்றிருக்கும். தாங்கள் பின்பற்ற விரும்பும் கொள்கைகளுக்கு ஏற்ப, 1957-58-ம் ஆண்டின் முடிவான வரவு செலவுத் திட்டத்தை வகுப்பது, அந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆகவே, புது அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, புதுத் திட்டங்களையும் வரிவிதிப்பு யோசனைகளையும் இணைத்து, வரவு செலவுத் திட்டத்தைத் திருத்தி அமைக்கும். திருத்தப்பட்ட இத் திட்டம், 1957-ம் ஆண்டு ஜூன் மாத வாக்கில், சட்டசபைகளின் முன் சமர்ப்பிக்கப்படும். இப்போது வகுக்கப்பட்டுள்ள திட்டத்தின் பேரில், அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஒவ்வொரு இனத்தின் கீழும் உத்தேசமாக எதிர்பார்க்கும் செலவிற்கு வேண்டிய அளவிற்குமட்டுமே மானியம் (vote on account) கோரப்படும். 1955-56-ம் ஆண்டின் வரவு செலவுக் கணக்குகளையும், 1956-57-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளையும், இப்போது வகுக்கப் பட்டுள்ளபடி 1957-58-ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளையும் சுருக்கமாக விளக்கும் தனி அறிக்கை* ஒன்று கனம் அங்கத்தினர்களிடையே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் விசேஷ நிலைமையை முன்னிட்டு, விரிவான வரவு செலவுத் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை.

2. 1956-ம் ஆண்டு நவம்பர் முதல் தேதி முதல் ஏற்பட்ட ராஜ்ய சீரமைப்பின் பயனாக, மலையாளம், தென் கன்னடம் ஆகிய மாவட்டங்களும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கொள்ளேகால் தாலுகாவும், கேரள, மைசூர் ராஜ்யங்களுடன் சேர்ந்துள்ளன என்பதையும், லக்ஷத்தீவுகள், மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன என்பதையும் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். திருவாங்கூர்-கொச்சியில் பெருவாரியாகத் தமிழ் பேசும் பகுதிகளில் பெரும்பகுதி சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கப் பட்டுள்ளன. பிற ராஜ்யங்களுக்கு மாற்றப்பட்ட பகுதிகளில், இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், கிடைத்த வருவாயும் ஏற்பட்ட செலவும், இந்த ராஜ்யத்துக்குப் புதிதாக வந்துள்ள பகுதிகளில், கடைசி ஐந்து மாதங்களுக்கான வருவாய் செலவும், நடப்பு ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் அடங்கியுள்ளன. தற்காலிக மதிப்பீட்டின்படி, முந்திய திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து வந்து, ராஜ்யங்கள் சீரமைப்பு.

* Printed as Appendix on pages 31-87 infra.

கன்யாகுமரி மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில், 1956 நவம்பர் முதல் 1957 மார்ச்சு வரை ஏற்படக்கூடிய செலவு, வருவாயைவிட 23 லட்ச ரூபாய் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் ஆண்டில், இந்தப் பகுதியில், வரவை விட செலவு 84 லட்ச ரூபாய் அதிகமாக இருக்கும் என்று கணக்கிடப்படுகிறது. புதுத் திட்டங்களுக்காகப் பணம் ஒதுக்கப்படும்போது, செலவு மேலும் அதிகமாகும். ஒருபுறம் செலவு இவ்வாறு அதிகரிக்கையில், கேரள, மைசூர் ராஜ்யங்களுடன் சேர்ந்துவிட்ட மலையாளம், தென் கன்னடம் ஆகிய மாவட்டங்களில் நாம் செய்து வந்த அதிகச் செலவு நமக்கு மிச்சமாகிறது. இவை ஒன்றுக்கொன்று சரிக்கட்டிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

1956–57-ம் ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீடுகள். வருவாய் இனம் (Revenue Account).

3. 1956–57-ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைச் சட்டசபை முன்பு சமர்ப்பித்தபோது, புது வரி விதிப்பு யோசனைகள் வழியாகக் கிடைக்கக்கூடிய 145 லட்ச ரூபாயை கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னரும், 166 லட்ச ரூபாய் பற்றுக்குறை விழும் என்று எதிர்பார்த்தோம். இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி, 57,08 லட்ச ரூபாய் மொத்த வருவாய் கிடைக்கும்; 60,87 லட்ச ரூபாய் செலவாகும். இதனால் 379 லட்ச ரூபாய் துண்டு விழுகின்றது. இது பெரிய தொகையே; அதிலும் குறிப்பாக பயிர் விளைச்சல் நிலைமை சாதகமாயிருந்த நிலையிலும் இத்துண்டு விழுவது கொஞ்சம் கவலை தரக்கூடியதே. ஆனால் சென்ற ஆண்டு டிசம்பர் மாதத்தில் தெற்கு மாவட்டங்களில் புயலால் எழுந்த நாசத்தைத் தடுக்க நிவாரண நடவடிக்கைகளுக்காக நாம் மிக அதிகம் செலவு செய்ய வேண்டியிருந்தது. கஷ்ட நிவாரணத்துக்குத் தானமாக சுமார் 122 லட்ச ரூபாயும், பொது சாதனங்களைப் பழுதுபார்ப்பதற்காக 315 லட்ச ரூபாயும், கடன்களாகச் சுமார் 372 லட்ச ரூபாயுமாக, 809 லட்ச ரூபாய் மொத்தச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் மட்டும் இதற்காக 615 லட்ச ரூபாய் செலவாகும். இத்தொகை நாம் முதலில் மதிப்பிட்டதைவிட 377 லட்ச ரூபாய் அதிகமாகும். இந்த நிவாரண நடவடிக்கைகளுக்காக, மத்திய அரசாங்க உதவி தாராளமாகக் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் எஞ்சிய செலவை, ராஜ்ய நிதிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறைந்த சம்பளம் வாங்கும் பொதுநல ஊழியர் ஊதியத்தைச் சமீபத்தில் உயர்த்தியுள்ளோம். இதனால் இந்த ஆண்டில் எஞ்சியுள்ள மாதங்களில், சுமார் 65 லட்ச ரூபாய் செலவாகும். பெரிய துண்டு விழுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இனும் நிலங்கள் மீது அதிக வரி, டீசல் எண்ணெய் மீது அதிக வரி, இவை போல் இந்த ஆண்டில் போட்ட புது வரி விதிப்பு யோசனைகளில் சில இனித்தான் அமுலுக்கு வரவேண்டியிருக்கின்றன. புது வரி விதிப்பு யோசனைகளை நடைமுறையில் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், முன் வரவு செலவுத் திட்டத்தில் கண்ட வருவாயில் சுமார் 70 லட்ச ரூபாய் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பல புதுத் திட்டங்களை இவ்வாண்டில் நாம் நடத்தத் தொடங்கியுள்ளோம். இக்காரணங்களால் இன்னும் அதிகத் தொகை துண்டு விழுந்திருக்கவேண்டும். ஆனால் பொது

17th December 1956] [Sri C. Subramaniam]

விற்பனை வரி, விவசாய வருமான வரி, மோட்டார் வண்டிகள் வரி, ஆகிய முக்கிய வருவாய் இனங்களில் நமக்குச் சாதகம் ஏற்பட்டதால், துண்டு விழும் தொகை அவ்வளவு அதிகரிக்கவில்லை.

மூலதனச் செலவு, 1956–57.

4. நடப்பு ஆண்டில் மூலதனச் செலவு இனத்தின்கீழ் 27,61 லட்ச ரூபாய் செலவாகும் என்று முதல் வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டிருந்தோம். ஆனால் 24,14 லட்ச ரூபாய்தான் செலவாகும் என்று இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது. மின்சார இலாகாவுக்கும் நீர்ப்பாசன இலாகாவுக்கும், முதலில் ஒதுக்கப்பட்டிருந்த தொகை முழுவதையும் அநேகமாக செலவு செய்யமுடியும் என்று நம்பப்படுகிறது. மூலதனச் செலவு இனத்தில், கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவாகாது. சிமிட்டி, எஃகு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றுக்குறையே இதற்கு முக்கிய காரணம்.

வரவு செலவு திட்ட மதிப்பீடுகள், 1957–58 வருவாயினம் (Revenue Account.)

5. 1957–58-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, இப்போதுள்ள வரிவிதிப்புகள் முறையில், 52,65 லட்ச ரூபாய் கிடைக்குமென்றும் 57,71 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், ஆக 506 லட்ச ரூபாய் துண்டு விழும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கிய பல புதுத் திட்டங்களுக்கான செலவும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் பற்றிய விவரங்கள், தனி அறிக்கையில் ஒரு இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே நடத்தக்கூடிய புதுத் திட்டங்களுக்கு மட்டுமே பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற திட்டங்கள் பின்பு பரிசீலனை செய்யப்பட்டு, தேர்தலுக்குப்பின் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தில் இணைக்கப்படும். புதுத் திட்டங்களுக்காக வருவாய் இனத்தில் 130 லட்ச ரூபாயும், மூலதன இனத்திலும் மற்ற இனங்களிலும் 248 லட்ச ரூபாயும் நிகரமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

வருவாய் இனத்தில் துண்டு விழும் இவ்வளவு பெரிய தொகையை ஈடு செய்ய, எத்தகைய வழிகளையும், முறைகளையும் மேற்கொள்ளலாம் என்பதுபற்றி புது அரசாங்கம், அவசியம் ஆலோசனை செய்ய வேண்டிவரும். இத்தொகையில் சுமார் 2 கோடி ரூபாய், கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர், பள்ளி ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் ஆகியோரின் ஊதியங்களை உயர்த்தியதால் ஏற்பட்ட செலவாகும். குறைந்த சம்பளம் வாங்கும் ஊழியர்களுக்கு, இந்த உயர்வினால் போதுமான அளவு நிவாரணம் கிடைக்கவில்லை என்பது உண்மையாயிருக்கலாம். அவர்கள் கஷ்டங்களுக்காக நாம் எவ்வளவு அனுதாபப்பட்டாலும், மத்திய அரசாங்கம் தாராளமாக உதவ முன்வந்தால் ஒழிய, இதைக் காட்டிலும் அதிகம் செய்ய நம் ராஜ்ய நிதி நிலைமை இடம் தராது என்பதை, இச்சபை உணர வேண்டும். இவ்விஷயமாக, இந்திய அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோள் அனுப்பியுள்ளோம். சமீபத்தில் தில்லியில், தேசிய அபிவிருத்திக் குழுவின் கூட்டம் நடந்தபோதும், இது பற்றி விவாதிக்கப்பட்டது. மத்திய அரசாங்க நிதி மந்திரி இவ்விஷயத்தை இப்போது யோசித்து வருகிறார்; நமக்குச் சாதகமாக முடிவு செய்வார் என்று நம்பலாம். இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிதிக் கமிஷனிடமும் நாம் நிலைமையை எடுத்துச் சொல்லியுள்ளோம். அடுத்த பிப்ரவரி மாத ஆரம்பத்தில் நம் ராஜ்யத்துக்கு நிதிக் கமிஷன் வரும்போது இதை மேலும் வற்புறுத்துவோம்.

மூலதனச் செலவு, 1957–58.

6. 1956–57-ம் ஆண்டின், திருத்தப்பட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 24,14 லட்ச ரூபாய். 1957–58-ம் ஆண்டில் 25,64 லட்ச ரூபாய் மூலதனச் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மதிப்பீடுகள் பற்றிய முழு விவரங்கள் தனி அறிக்கையில் தரப்பட்டுள்ளன. மூலதனச் செலவினத்தில் முக்கிய அம்சம், மின்சாரத் திட்டங்களுக்காக சுமார் 16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரும் ஆண்டில், குந்தா, பெரியாறு திட்டங்களில் வேலை மிகத் துரிதமாக முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி பரப்பும் திட்டமும் நன்கு முன்னேறி வருகிறது. ஐந்தாண்டுத் திட்டப்படி, இந்த ஆண்டில் சுமார் 500 கிராமங்களுக்கு மின்சார வசதி பரப்ப உத்தேசித்திருந்தோம். ஆனால் இந்த ஆண்டிலேயே ஏறக்குறைய 1,000 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்படும். இதே வேகத்தில் அடுத்த ஆண்டிலும் முன்னேற முடியும் என்று நம்புகிறோம்.

1957–58-ம் ஆண்டில், ரொக்க வசதித் தேவை (ways and means requirements) சுமார் 37,57 லட்ச ரூபாயாகும். மத்திய அரசாங்கத்தில் இருந்து கிடைக்கும் உதவி, பொது மக்களிடமிருந்து வாங்கும் கடன், தவிர்க்க முடியாத அளவுக்கு அதிக வரி விதிப்பு, ஆகியவை மூலம் இத்தொகை கிடைக்கும் என்று நம்புகிறோம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

7. 1956–57-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில், கன்யாகுமரி மாவட்டத்தின் தேவைகள் நீங்கலாகவும், பிற ராஜ்யங்களுடன் சேர்க்கப்பட்ட பகுதிகள் நீங்கலாகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்காக சுமார் 35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய உற்பத்தி, கிராம சிறு கைத்தொழில்கள், ஆகிய துறைகளில் ஒதுக்கப்பட்டிருந்த அளவு செலவு செய்யப்படவில்லை. இந்த புதிய அபிவிருத்தி வேலைகளை முறைப்படுத்தி ஒழுங்காக அமைப்பதற்கு, நாம் எதிர்பார்த்ததை விட அதிக காலம் ஆகிவிட்டது. ஆனால் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கொண்டு பார்த்தால், வரும் ஆண்டில் அதிக முன்னேற்றம் இருக்கும் என்று நம்ப இடமிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்காக வரும் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை சுமார் 40 கோடி ரூபாய். செலவினங்கள் பற்றிய பொது விவரங்கள், தனி அறிக்கையில் ஒரு இணைப்பில் தரப்பட்டுள்ளன. கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, திட்ட வேலைகள், திட்டத்தில் உட்படாத வேலைகள், எல்லாவற்றிற்கும் சேர்த்து மொத்தமாக ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கன்யாகுமரிக்காக 1956–57-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 91 லட்ச ரூபாயும், 1957–58-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 180 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சலுகைகள்.

8. கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களுக்கு இப்போது கல்வி, வைத்திய சலுகைகள் தரப்படுகின்றன. இச்சலுகைகளை, பல தரப்பட்ட கிராம அதிகாரிகள் அனைவருக்கும் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மேலும், அரசாங்க ஊழியர்களில் கடைசி வகுப்பினருக்குத் தரப்படுவது போல், தலையாரி, வெட்டி, நீர்கட்டி ஆகிய கிராம ஊழிய வகுப்பினர் குழந்தைகளுக்கும், நான்காவது

17th December 1956] [Sri C. Subramaniam]

படிவம் முதல் ஆருவது படிவம் வரை, முழு இலவசக் கல்வி அளிக்கப்படும். இச்சலுகைகள், உத்திரவு பிறப்பிக்கப்படும் தேதியிலிருந்து அமுலில் வரும். நடப்பு ஆண்டில் எஞ்சிய மாதங்களுக்கும் இச்சலுகைகள் உண்டு. நிர்ணயம் **(Settlement)** செய்யப்பட்ட ரயத்வாரிக் கிராமங்களின் கிராம அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட் கிராமங்களில் உள்ள கர்ணங்களுக்கும், முப்பணி அதிகாரிகள் **(Triune Officers)** உள்பட, அவர்கள் செய்ய ஏற்படும் பிரயாணங்களுக்குப் பிரயாணப்படி மொத்த விகிதத்தில் தரப்படும். தாலுகாத் தலைமை நிலையத்திற்கும், அவர்கள் கிராமத்திற்கும் இருக்கும் தூரத்தைக் கொண்டு இத்தொகை நிர்ணயிக்கப்படும். அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட் கிராமங்களில் உள்ள கிராமத் தலைமை அதிகாரிகளுக்கும் தங்கள் வேலை சம்பந்தமாகச் செய்யும் பிரயாணங்களுக்காக, பிரயாணச் செலவு தரப்படும். விசுவாசத்துடன் உழைக்கும் இப்போது நல ஊழியர்களின் நியாயமான குறைகளை, இந்தச் சலுகைகள் ஓரளவு தீர்க்கும் என்று அரசாங்கம் நம்புகிறது. கிராம அதிகாரிகளின் அமைப்புகளையும், அவர்கள் வேலை வசதிகளையும் திருத்தி அமைக்கும் பொதுப் பிரச்னை, மிகவும் கவனத்துடன், நிர்வாக, பொருளாதார நோக்குகளிலிருந்து பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். இப்பிரச்னை பொதுத் தேர்தலுக்குப் பின் எடுத்துக்கொள்ளப்படும்.

மற்றொரு சலுகை, கிறிஸ்துவ மதத்தைத் தழுவியுள்ள ஹரிஜனங்களுக்குத் தரப்படுகிறது. இவ்வாறு மதம் மாறியவர்களுக்கும், ஹரிஜனங்களுக்குமிடையே, கல்விச் சலுகைகளில் இப்பொழுது சில வித்தியாசங்கள் பாராட்டப்படுகின்றன. இவ்வித்தியாசங்கள் அகற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆகவே, இவ்வித்தியாசங்களை அகற்றி, ஹரிஜனங்களுக்குத் தரும் கல்விச் சலுகைகளை, மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் வழங்க அரசாங்கம் இப்பொழுது தீர்மானித்துள்ளது.

ஆலைத்துணி, புகையிலை, சர்க்கரை போன்ற பொருள்கள் மீது மத்திய அரசாங்கம் இப்பொழுது எக்ஸைஸ் வரிகளை ஆரம்பக் கட்டத்திலேயே விதித்து வருகின்றது. இப்பொருள்கள் மீது விற்பனை வரி விதிக்கும் பிரச்னை சமீபத்தில்' தில்லியில் கூடிய தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இப்பொருள்கள் மீது விற்பனை வரியைக் கைவிட எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்றும், இதற்கு பதிலாக ஆரம்பக் கட்டத்திலேயே மத்திய அரசாங்கம் எக்ஸைஸ் கட்டணம் விதித்து அதைப் பல்வேறு ராஜ்ய அரசாங்கங்களுக்கும் பகிர்ந்து தரவேண்டும் என்றும் இந்த அரசாங்கம் வற்புறுத்தி வந்துள்ளது. இந்த சிபார்சை தேசிய அபிவிருத்திக் குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்தத் தீர்மானத்தை மத்திய அரசாங்கம் விரைவில் நடைமுறையில் கொண்டு வரும் என்றும் எதிர்பார்க்கலாம். இந்த நடவடிக்கைகளால் ராஜ்ய வருவாயில் நஷ்டம் எதுவும் ஏற்படாது. விற்பனை வரித்திட்டத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று வற்புறுத்திவந்துள்ள வர்த்தகர்களின் கோரிக்கையை இது ஓரளவு திருப்தி செய்யும்.

முடிவுரை.

9. இந்த சபை ஏறக்குறைய ஐந்தாண்டுகள் வேலை செய்து வந்துள்ளது. இதுதான், நான் இச்சபைமுன் சமர்ப்பிக்கும் கடைசி வரவு செலவுத் திட்டம். இச்சமயத்தில் இதுகாறும் எனக்கும் அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்பும் உதவியும் அளித்து வந்துள்ள கனம் அங்கத்தினர்களுக்கு நான் என் நன்றியை செலுத்த விரும்புகின்றேன். இது ஒரு இடைக்கால வரவு செலவுத் திட்டம். ஆகவே நிர்வாகத்தின் பல்வேறு துறைகளைப் பற்றி நான் விமர்சனம் செய்யப் போவதில்லை. வரும் ஆண்டைப் பொருத்தவரை முடிவான அதிகாரத்தை நமக்குப் பின் பொறுப்பேற்பவர்களே செலுத்தமுடியும். இந்த வரவு செலவுத் திட்டத்தைத் திருத்தி அமைக்கும் வாய்ப்பும் உரிமையும் அவர்களைச் சாரும். கனம் அங்கத்தினர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றித் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் போது இந்த வரம்பை மனதில் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again to-morrow at 9 a.m.

The House then adjourned (12-10 p.m.).